# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No. 25/2022**

Deposition of witness for : PW6

Name : பாஸ்கர்

Father's / Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 14th day of October 2024.

**முதல் விசாரணை:–**

நான் உப்பு பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பள்ளி வேன் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். 1வது எதிரி என் பக்கத்து காட்டுக்காரர். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்துபோன சேகர் (எ) ராமசாமி எனது பக்கத்து காட்டுக்காரர். 03.03.2021ம் தேதி இரவு 9.30 மணியளவில் ராஜாமணி என்பவர் எனது பக்கத்து நிலத்தில் என்ன பிரச்சனை என்று கேட்டார். நான் தெரியவில்லை என்று சொன்னேன். அங்கு என்ன சண்டை நடந்தாலும், நான் அங்கு செல்வதில்லை என்று சொன்னேன். இரவு 12.00 – 1.00 மணிக்கு காவல் துறையினர் வந்து என்னிடம் விசாரித்தார்கள்.

நான் 35 வருடமாக பக்கத்து நிலத்துக்காரரிடம் பேசுவதில்லை என்று சொன்னேன். 3 – 4 நாட்கள் கழித்து போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். வாக்குமூலம் எழுத வேண்டும் என்று சொன்னார்கள். நான் தற்போது சொன்னதுபோல் தான் அங்கு போய் சொன்னேன்.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன சேகர் விவசாயம் செய்தும், பால் வியாபாரம் செய்தும் வந்தார் என்றும், சேகர் அனிதா என்ற பெண்ணை திருமணம் செய்து விவாகரத்து செய்துவிட்டார் என்றும், அதன் பிறகு சேகர் குடித்துவிட்டு பணத்தை செலவு செய்து வந்தார் என்றும்., அடிக்கடி நாச்சிமுத்துவிடம் பணம் கேட்டு தகராறு செய்வார் என்றும், 3 வருடத்திற்கு முன்பு சேகர் நாச்சிமுத்துவை அடித்தார் என்றும், மாட்டை விற்று, பேங்கில் கடன் வாங்கி குடித்து செலவு செய்து வந்தார் என்றும், கடந்த 1 மாதத்திற்கு முன்பு சேகர் நாச்சிமுத்துவிடம் தகராறு செய்தார் என்றும், அப்போது நாச்சிமுத்து சேகரை உன்னால் எனக்கு தொல்லை என்றும், உன்னை முடித்தால் தான் எனக்கு நிம்மதி என்று சத்தம் போட்டார் என்றும் 03.03.2021ம் தேதி இரவு 9.00 மணி சுமாருக்கு என் வீட்டிற்கு பின்னால் நாச்சுமுத்து வீட்டின் வண்டி தடத்தின் மேற்கு புறம் உள்ள தென்னந்தோப்பில் சேகர் வலது கண் புருவம், மார்பின் இடது புறம், இரண்டு கால்கள், நெற்றியின் இடது புறம், வலது கை மோதிர விரல் ஆகிய இடங்களில் காயத்துடன் இறந்து கிடந்தார் என்றும், அது சம்மந்தமாக நான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றும், தற்போது 1ம் எதிரி எனது நிலத்திற்கு அருகில் இருப்பதால், எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.